# Padasalai's
# Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC

அறிஞர் அண்ணா அரசினர் மேல்நிலைப் பள்ளி, பரந்தூர்,

காஞ்சிபுரம் மாவட்டம்

# கணக்குப்பதிவியல்

## பதினோராம் வகுப்பு

## கருத்தியல் மற்றும் கணக்கியல் வினா - விடைகள்

( 2020 - 2021 )

B. பாலாஜி,
முதுகலை ஆசிரியர் - வணிகவியல்,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
பரந்தூர்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 552.
கைப்பேசி எண் : 9629647613



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## இரண்டு மற்றும் மூன்று மதிப்பெண் வினா விடைகள்

1. **கணக்கியலை வரையறு.**

- அமெரிக்ககணக்கியல் கழகத்தின் கூற்றின்படி, "கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களைக் கண்டறிந்து, அளவிட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும். இதன்மூலம், தகவல்களைப் பயன்படுத்துவோர் தக்கதீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வகை செய்கிறது".

2. **கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக.** ( மார்ச் 2019 )

i) **அளவிடுதல்**

- வணிக நடவடிக்கைகள் குறித்து முறையான ஆவணங்களை வைத்திருத்தல், பதிவு செய்தல், எடுத்தெழுதுதல், கடைசியாக இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் ஆகியவையே கணக்கியலின் முதன்மையான பணியாகும்.

ii) **முன்னறிதல்**

- வணிக நிறுவனங்களின் எதிர்கால செயல் திறன் மற்றும் நிதிநிலை பற்றி கணக்கியலின் பல்வேறு கருவிகளின் மூலம் முன்கூட்டியே அறிந்து கொள்ளுதல்.

iii) **ஒப்பிடுதல்**

- கணக்கியல், நிகழ்ந்த செயல் திறனுடன், திட்டமிட்ட செயல் திறனை ஒப்பிட உதவுகிறது.

3. **கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?**

- உரிமையாளர்கள், பணியாளர்கள், நிர்வாகம் (அகப் பயனீட்டாளர்கள் )
- முதலீட்டாளர்கள், வாடிக்கையாளர்கள்,கடனீந்தோர், வரிவிதிப்பு அதிகாரிகள் , ஆராய்ச்சியாளற்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கம் (புறப் பயனீட்டாளர்கள் )

4. **கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக. ( ஏதேனும் 3 )**

1) **நிதி நிலைக் கணக்கியல்**

- இது நிதியியல் நடவடிக்கைகளையும், நிகழ்வுகளையும் பதிவு செய்யக்கூடியது.
- இது வரலாற்றுத் தன்மையுடையது.
- ஏற்கனவே நடந்து முடிந்த நடவடிக்கைகளை மற்றும் நிகழ்வுகளை கணக்கேடுகளில் பதிவு செய்து பராமரிப்பதே நிதிநிலை கணக்கியலாகும்.

2) **அடக்கவிலைக் கணக்கியல்**

- பொருட்கள் அல்லது சேவைகளின் அடக்க விலையைக் கணக்கிடுவதற்கு செலவு விவரங்களை சேகரித்து, பதிவு செய்து, வகைப்படுத்தி, செலவினங்களை ஒதுக்கீடு செய்வது அடக்க விலை கணக்கியல் ஆகும்.

3) **மேலாண்மைக் கணக்கியல்**

- கணக்கியல் தகவல்களை நிர்வாகத்திற்கு தருவதன் மூலம் முடிவு எடுப்பதற்கும், நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகளுக்கும் துணைசெய்வதே மேலாண்மைக் கணக்கியல் ஆகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

4) <u>சமூகப் பொறுப்பு கணக்கியல்</u>
- ❖ இது வணிக நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் கணக்கியல் தகவல்களை சமூகத்தின் பார்வையில் வழங்குவதாகும்.
- ❖ உதாரணமாக உள் கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவை தெரிவிக்கப்படும்.

5) <u>மனிதவளக் கணக்கியல்</u>
- ❖ இது ஒரு நிறுவனம், அதன் மனித வளத்தில் செய்த முதலீடுகளை இனம் காணுதல், அளவிடுதல், மற்றும் அறிவித்தல் ஆகியவற்றைச் சார்ந்ததாகும்

---

5. **கணக்கியலின் முக்கியத்துவத்தினை விரிவாக விளக்குக. ( ஏதேனும் 3 )** ( மார்ச் 2019

1) <u>முறையானபதிவேடுகள்</u>
- ❖ அனைத்து நிதிசார்ந்த நடவடிக்கைகளும் கணக்கேடுகளில், முறையாகவும், பொதுவான தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டும் தொகுக்கப் படுகின்றன.

2) <u>நிதிநிலைஅறிக்கைகள் தயாரித்தல்</u>
- ❖ வருமான அறிக்கை அல்லது இறுதிக் கணக்குகளை, உரிய காலங்களில் தயாரிப்பதன் மூலம் ,வணிகத்தின் இயக்க முடிவுகளையும், நிதி நிலையையும் அறிய முடியும்.

3) <u>வளர்ச்சியை மதிப்பிடல்</u>
- ❖ வணிகத்தின் நீர்மைத்தன்மை, இலாபத்தன்மை மற்றும் கடன் தீர்க்கும் திறன் ஆகியவற்றின் முழுமையான நிலையினை நிர்வாகத்திற்கு கணக்கியல் அளிக்கிறது.

4) <u>முடிவெடுக்க உதவுதல்</u>
- ❖ நிர்வாகம் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான, உரிய தகவல்களை கணக்கியல் அளிக்கிறது.
- ❖ அந்தத் தகவல்களின் அடிப்படையில் எதிர்காலக் கொள்கைகளையும் திட்டங்களையும் நிர்வாகம் உருவாக்குகிறது.

5) <u>பயனீட்டாளர்களுக்கு தகவல் தருதல்</u>
- ❖ உரிமையாளர்கள், நிர்வாகம், கடனீந்தோர், பணியாளர்கள், நிதி நிறுவனங்கள், வரிவிதிப்பு அதிகாரிகள் மற்றும் அரசாங்கம் போன்ற பல்வேறு பயனீட்டாளர்களுக்கு கணக்கியல் தகவல்களைத் தருகிறது.

6) <u>சட்டச் சான்றாக இருத்தல்</u>
- ❖ பொதுவாக நீதிமன்ற வழக்குகளிலும் இதர ஆணையங்களிலும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண கணக்கேட்டுப்பதிவுகள் சான்றாக ஏற்கப்படுகின்றன.

7) <u>வரி கணக்கிடுதல்</u>
- ❖ வருமானவரி மற்றும் இதரவரிகள் கணக்கிடுதல் மற்றும் செலுத்தலில் கணக்கேடுகள் அடிப்படை ஆதாரமாக இருக்கின்றன

---

6. **கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்?**
(அ) முதலீட்டாளர்கள் (ஆ) அரசு

அ. <u>முதலீட்டாளர்கள்</u>
- ❖ ஒரு நிறுவனத்தில், தங்களது நிதியை முதலீடு செய்யும் ஆர்வமுள்ளவர்கள் முதலீட்டாளர்கள்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

- தாங்கள் இடும் முதல், இலாபகரமாக தங்களது கைக்கு திரும்ப வரவேண்டும் என நினைப்பத்து முதலீட்டாளர்களின் இயல்பே.
- எனவே, நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளவும், எதிர்கால இலாபம் மற்றும் இடர் ஏற்கும் திறன் போன்றவற்றை தெரிந்து கொள்ளவும் அதிக ஆர்வம் கொண்டிருப்பர்.

ஆ. <u>அரசு</u>

- வணிக நிறுவனங்கள், நாட்டின் அரிதான வளங்களைப் பயன்படுத்துகின்றன.
- அரசாங்கம் , வணிக நிறுவனங்களின் செயல் திறனை அறிந்து வைத்திருந்தால் மட்டுமே, அரிதான வளங்களை ஒதுக்கீடு செய்தல், வணிகம் மற்றும் தொழில் துறைச் சார்ந்த கொள்கை முடிவுகளை உருவாக்குதல், மானியம் மற்றும் சலுகைகள் வழங்குதல் போன்றவற்றிற்கான முடிவுகளை எடுக்க முடியும்.
- மேற்கண்ட காரணத்தாலேயே, அரசு கணக்கியல் தகவல்களில் அதிகம் ஆர்வம் காட்டுகின்றது.

**7. கணக்கியலின் நோக்கங்களை எழுதுக.** ( ஜூன் 2019 )

i) நிதி நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகள் குறித்த முறையான பதிவேடுகளை வைத்திருத்தல்
ii) வணிக நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டத்தை கண்டறிதல்
iii) வணிக நிறுவனத்தின் நிதிநிலை மற்றும் நிலையை அறிதல்
iv) பல்வேறு பயனீட்டாளர்களின் தேவைக்கேற்ப தகவல்களை வழங்குதல்
v) நிறுவனத்தின் சொத்துகளைப் பாதுகாத்தல் மற்றும்
vi) நிறுவனத்தின் கடன் தீர்க்கும் திறன் மற்றும் நீர்மைத்தன்மையை அறிதல்

**8. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.** ( மார்ச் 2019 )

- ஜே.ஆர். பேட்லிபாய் அவர்களின் கூற்றுப்படி, “கணக்கு ஏடுகள் பராமரிப்பு என்பது, வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலையாகும்”.

( அல்லது )

- ஆர்.என். கார்ட்டர் அவர்களின் கூற்றுப்படி, “கணக்கேடுகள் பராமரிப்பு என்பது , பணம் அல்லது பணத்தின் மதிப்பிலுள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளையும் கணக்கேடுகளில் சரியாக பதிவு செய்யும் கலை மற்றும் அறிவியல் ஆகும்.”

**9. ஒரு வணிக அமைப்பில் பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுகிறது. ஏன்?** ( ஜூன் 2019 )

- பணமதிப்பீட்டுக் கருத்தின்படி, எந்த நடவடிக்கைகளைப் பணத்தால் அளவிடமுடியுமோ, அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.
- பணமானது, பரிமாற்றத்தின் ஊடகமாக விளங்குவதால், பணத்தால் அளவிடக்கூடிய நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.
- பணம் ஒரு பொதுவான அளவீடாக இருப்பதால், பலதரப்பட்ட வணிக விவரங்களை அதன் மூலம் பதிவு செய்யமுடிகிறது.
- உதாரணமாக, ஒரு நிறுவனம், நாற்காலிகள் வாங்கியது ₹ 1,500 என்பதை, பண மதிப்பில் குறிப்பிடப் படவில்லையெனில், அச்சொத்துகளைக் கூட்டுவது பயனுள்ள தகவலாக இருக்காது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

10. **சிறு குறிப்பு தருக** ( மார்ச் 2019 )

(i) **வணிகத்தன்மைக் கருத்து**

- ❖ இக் கருத்தின்படி, வணிகநிறுவனம், முதல் இடுகின்ற உரிமையாளர் அல்லது உரிமையாளர்களிடமிருந்து தனித்து மற்றும் வேறுபட்டுள்ளதாக கருதப்படுகிறது.
- ❖ இக்கருத்தின் அடிப்படையில் கணக்குகள், உரிமையாளரின் கண்ணோட்டத்தில் இல்லாமல் வணிக நிறுவனத்தின் கண்ணோட்டத்தில் தயாரிக்கப்படுகின்றன. ஆதலால், உரிமையாளரின் முதல், நிறுவனம் செலுத்தவேண்டிய ஒரு பொறுப்பாகும்.

(ii) **நிறுவனத் தொடர்ச்சி கருத்து**

- ❖ இதன்படி, ஒரு வணிக நிறுவனம் தொடரக்கூடியது மற்றும் நீண்டகாலத்திற்கு தொடர்ந்து செயலாற்றும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே நடத்தப்பட்டு வருகிறது.
- ❖ இக்கருத்தின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை மதிப்பீடு செய்தல், நிலைச்சொத்தின் மீதான தேய்மானம், கொடுபடவேண்டிய மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள், பெற வேண்டிய மற்றும் கூடியுள்ள வருமானம் போன்றவைகளின் கணக்கியல் வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

11. **இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.** ( மார்ச் 2019

| | | |
|---|---|---|
| ஆள்சார் கணக்கு | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| சொத்து கணக்கு | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வரை வரவு செய்க |
| பெயரளவு கணக்கு | அனைத்துச் செலவுகளையும், நட்டங்களையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்க |

12. **இரட்டைப்பதிவு முறையின் நன்மைகளை விவரி**

i) **துல்லியத்தன்மை**

- ❖ வணிகத்தின் அனைத்து நடவடிக்கைகளும், இரு தன்மைகளோடு கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகின்றன.
- ❖ இது கணக்கியலின் துல்லியத்தன்மையை பரிசோதிக்க உதவுகிறது.

ii) **வணிகமுடிவுகளை உறுதிப்படுத்துதல்**

- ❖ இதன் உதவியால் ஒரு குறிப்பிட்ட கணக்காண்டின் நிகர இலாபம் அல்லது நிகர நட்டம் மற்றும் ஒரு குறிப்பிட்ட தேதியில் நிதி நிலையினைக் கணக்கிட முடியும்.

iii) **ஒப்பீட்டு ஆய்வு**

- ❖ வணிக நிறுவனத்தின் தற்கால முடிவுகளை, முந்தைய ஆண்டுகளின் முடிவுகளோடும், வேறு பல நிறுவனங்களின் முடிவுகளோடும் ஒப்பிட்டு பார்க்க முடியும்.
- ❖ இதன் மூலம் வணிகத்தின் எதிர்காலத் திட்டங்களை வகுக்க முடியும்.

iv) **பொதுவான ஏற்புத் தன்மை**

- ❖ இம்முறையில் கணக்கினைப் பதிவு செய்வதை நிதி நிறுவனங்கள், அரசு அதிகாரிகள் மற்றும் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர்.
- ❖ ஏனெனில், இது ஒரு முறையான, அறிவியல் பூர்வமானகணக்கு பராமரிப்பு முறையாகும்.

13. குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

| அடிப்படை | குறிப்பேடு | பேரேடு |
|---|---|---|
| 1. பதிவு செய்தல் | நடவடிக்கை நிகழ்ந்தவுடன் இதில் பதிவு செய்யப்படும் | குறிப்பேடு தயாரித்த அதே நாளில் அல்லது துணை ஏடுகள் பராமரித்து வந்தால், ஒரு குறிப்பிட்ட காலத்தின் இறுதியில் அதாவது வாரத்தின் கடைசி நாள் அல்லது இரு வாரங்களுக்கு ஒருமுறை இதில் எடுத்தெழுதப்படும் |
| 2. பதிவு செய்யும் நிலை | பதிவு செய்வது முதல் நிலையாகும் | குறிப்பேட்டில் பதிந்த பிறகு பேரேடு தயாரிப்பதால், இது இரண்டாவது நிலையாகும. |
| 3. பதிவு செய்யும் வரிசை | நடவடிக்கைகள் நிகழ்ந்த வரிசைப்படி அதாவது, நடவடிக்கைகள் நிகழ்ந்த நாளின் படி பதிவு செய்யப்படுகிறது | கணக்குகளின் வரிசைப்படி ,பதிவுகள் செய்யப்படுகின்றன. |
| 4. வழிமுறை | ஏடுகளில் பதிவு செய்வதை, குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்கிறோம். | பேரேட்டில் பதிவு செய்வதை, எடுத்தெழுதுதல் என்கிறோம். |
| 5. இருப்பாய்வு தயாரிக்க உதவுதல் | குறிப்பேட்டில் பதியப்பட்டுள்ள தொகைகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்க இயலாது | பேரேட்டுக் கணக்குகளின் மூலம் கிடைக்கப் பெற்ற இருப்புகளே இருப்பாய்வு தயாரிக்க அடிப்படையாகிறது. |
| 6. பதிவிற்கான ஆதாரம் | ஆதாரஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பேட்டுப்பதிவுகள் செய்யப்படுகின்றன. | குறிப்பேட்டுப் பதிவுகளைக் கொண்டு பேரேடு தயாரிக்கப்படுகிறது. |
| 7. நிகர நிலை | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறிய முடியாது. | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறியலாம். |

14. இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?

1. இருப்பு முறை
2. மொத்தத் தொகை முறை
3. மொத்தத் தொகை முறை மற்றும் இருப்பு முறை.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

15. முப்பத்தி ரொக்க ஏடு என்றால் என்ன?

- ரொக்கம், வங்கி மற்றும் தள்ளுபடி என்ற மூன்று தொகைப் பத்திகளைக் கொண்டிருக்கும் ஏடு முப்பத்தி ரொக்க ஏடு ஆகும்.

16. ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

| வ. எ ண் | அடிப்படை | ரொக்கத் தள்ளுபடி | வியாபார தள்ளுபடி |
|---|---|---|---|
| 1 | நோக்கம் | பொருளை வாங்கியவர் தொகையை முன்கூட்டி செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. | வாங்குபவர் அதிகப்படியான எண்ணிக்கையில், பொருட்களை வாங்கும் பொருட்டு அவர்களை ஊக்குவிப்பதற்காக இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது |
| 2 | வழங்கப்படும் காலம் | ரொக்கத் தள்ளுபடி, விற்றவர் அல்லது கடனீந்தோரால் வாங்கியவர் அல்லது கடனாளிக்கு தொகையைத் திரும்ப செலுத்தும்போது வழங்கப்படுகிறது | வியாபாரத் தள்ளுபடி, விற்றவரால் வாங்கியவருக்கு பொருட்களை விற்கும்போது வழங்கப்படுகிறது. |
| 3 | தள்ளுபடி தொகை | இத் தள்ளுபடி திரும்ப செலுத்தும் காலத்தை அடிப்படையாகக் கொண்டது. | இத் தள்ளுபடி பொருட்கள் வாங்கிய அளவினை அடிப்படையாகக் கொண்டது. |
| 4 | கணக்கேடுளில் பதிவு செய்தல் | இது, கணக்கேடுகளில் பதியப்படுகிறது | இது, கணக்கேடுகளில் பதியப்படுவது இல்லை |
| 5 | இடாப்பிலிருந்து கழித்து காட்டுதல் | இது, இடாப்பிலிருந்து கழித்துக் காட்டப்பட மாட்டாது. | இது, இடாப்பிலிருந்து கழித்து காட்டப்படும். |

17. வங்கிச் சரிகட்டும் பட்டியல் என்றால் என்ன? ( ஜூன் 2019 )

- ரொக்க ஏட்டில் செய்யப்படக் கூடிய ஒவ்வொரு பதிவிற்கும், வங்கியரால் பராமரிக்கப்படக்கூடிய செல்லேட்டில் சரிநிகர் பதிவு இருக்க வேண்டும்.
- அதேபோன்று வங்கிச் செல்லேட்டில் உள்ள ஒவ்வொரு பதிவிற்கும் சரிநிகர் பதிவு ரொக்க ஏட்டில் இருக்க வேண்டும்.
- வங்கி இருப்பு இரு ஏடுகளிலும் ஒரே தொகையினைக் காண்பிக்க வேண்டும்.
- இரண்டு இருப்புகளும் வெவ்வேறாக இருந்தால், அதற்கான காரணங்களை விளக்குவதற்காக தயாரிக்கப்படும் அறிக்கையையே, வங்கிச் சரிக்கட்டும் பட்டியல் என்று அழைக்கப்படுகிறது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

18. **வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக.**

1. ரொக்க ஏட்டின்படியான வங்கி இருப்பும், வங்கி அறிக்கையின் படியான வங்கி இருப்பும், வேறுபட்டிருப்பதற்கான காரணங்களை அடையாளம் காண,
2. காசோலைகள் தீர்வடைவதில் ஏற்படும் காலதாமதத்தை கண்டறிய,
3. ரொக்க ஏட்டின் வங்கி பத்தியின் சரியான இருப்பினை கணக்கிட,
4. வணிகத்தின் கணக்காளர்கள் மற்றும் வங்கி, நிதியினை தவறாக பயன்படுத்துவதை தடுக்க.

19. **பிழைத் திருத்தம் என்றால்என்ன?**

- தவறான எண்களையோ அல்லது எழுத்துகளை அடித்தலோ, திருத்தி எழுதலோ அல்லது மேல் எழுதலிலோ ஏற்பட்டுள்ள பிழைகளைச் சரியாக மாற்றுவது பிழைத்திருத்தம் எனப்படும்.
- உரிய கணக்குகளில், தகுந்த குறிப்பேட்டுப் பதிவுகளையோ அல்லது விளக்கக் குறிப்பையோ எழுதி பிழைகளின் விளைவை மட்டுப்படுத்தலே பிழைத்திருத்தம் எனப்படும்.

20. **விதிப்பிழை என்றால் என்ன?**

- நடவடிக்கைகளை கணக்கு ஏடுகளில் பதிவு செய்யும் போது, அடிப்படைக் கணக்கியல் விதிகளை தவறாக பின்பற்றுவதால் ஏற்படும் பிழையே விதிப்பிழை எனப்படும்.

21. **பகுதி விடுபிழை என்றால் என்ன?**

- கணக்காளர் ஒரு நடவடிக்கையின் ஒரு பகுதியை மட்டும் பதிவு செய்யத் தவறினால்,அது பகுதி விடு பிழையாகும்.

22. **முழு விடு பிழை என்றால் என்ன?**

- ஒரு நடவடிக்கையை, குறிப்பேட்டிலோ அல்லது துணை ஏட்டிலோ பதிவு செய்யத் தவறுவது அல்லது பேரேட்டில் எடுத்து எழுதும் போது, இரு தன்மைகளையும் பதிவு செய்யத் தவறுவதே முழு விடு பிழையாகும்.

23. **ஈடுசெய் பிழைகள் என்றால் என்ன?** ( மார்ச் 2019 )

- வெவ்வேறு பிழைகள் ஒன்றுக்கொன்று ஈடு செய்பவையாக அமைந்தால், அவை ஈடுசெய் பிழைகள் எனப்படும்.
- இப்பிழைகள், தொடர்புடைய கணக்கிலோ அல்லது தொடர்பு இல்லாத கணக்கிலோ நிகழலாம்.
- எனவே, ஒரு கணக்கின் கூடுதல் பற்று அல்லது வரவு மற்றொரு கணக்கின் கூடுதல் வரவு அல்லது பற்றின் மூலம் ஈடு செய்யப்படலாம்.

24. **செய்பிழைகள் என்றால் என்ன?**

- ஒரு நடவடிக்கையானது தவறாகப் பதிவு செய்யப்பட்டால் அது செய்பிழை எனப்படும்.
- இப்பிழை, கணக்காளரின் ஒருமுகப்படுத்தல் இல்லாததாலும், கவனம் இன்மையாலும் நிகழ்வதாகும்.

25. **அனாமத்துக் கணக்குப்பற்றிக் குறிப்பு எழுதவும்.**

- இருப்பாய்வு சமநிலை அடையாத போது, வேறுபாட்டுத் தொகையை, அனாமத்துக் கணக்கு என்ற தற்காலிகக் கணக்கில் பற்று அல்லது வரவு வைக்க வேண்டும்.

- பற்று இருப்புகளின் கூட்டுத் தொகையைக் காட்டிலும் வரவு இருப்புகளின் கூட்டுத் தொகை மிகையாக இருக்கும் போது பற்று வைக்கப்படும்.
- மாறாக, வரவு இருப்புகளின் கூட்டுத்தொகை பற்று இருப்புகளின் கூட்டுத் தொகையைவிடக் குறைவாக இருப்பின் வரவு வைக்க வேண்டும்.

## 26. தேய்மானம் என்றால் என்ன?

- நிலைச் சொத்தின் அடக்க விலையை, அதனுடைய பயனளிப்புக்காலத்திற்கு ஒதுக்கீடு செய்யும் செயல்முறை தேய்மானம் ஆகும்.
- இது, ஒரு கணக்காண்டில் நிலைச் சொத்துகளிலிருந்து கிடைக்கக் கூடிய பயன்களுக்குரிய அடக்கவிலையை ஒதுக்கீடு செய்வது ஆகும்.

( அல்லது )

- தேய்மானம் என்பது எக்காரணத்தினாலும், ஒரு சொத்தின் மதிப்பில் உண்டாகும் படிப்படியான மற்றும் நிலையான குறைவே ஆகும்."

## 27. தேய்மானம் கணக்கீடும் முறைகள் யாவை?

1. நேர்க்கோட்டு முறை அல்லது நிலைத்தவணை முறை
2. குறைந்து செல் மதிப்பு முறை
3. ஆண்டுகளின் இலக்கங்களின் கூட்டுத்தொகை முறை
4. இயந்திரமணி நேரவீத முறை
5. வெறுமையாதல் முறை
6. ஆண்டுத் தொகை முறை
7. மறுமதிப்பீட்டு முறை
8. ஈடு நிதி முறை
9. காப்பீட்டு முனைம முறை

## 28. ஆண்டுத் தொகை முறையில் தேய்மானம் கணக்கிடுதல் என்றால் என்ன?

( ஜூன் 2019 )

- ஆண்டுத் தொகை முறையில், தேய்மானம் கணக்கிடும்போது, சொத்தின் ஆரம்ப அடக்கவிலை மட்டும் அல்லாமல், முதலீடுகளிலிருந்து பெறப்படும் வட்டியும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.
- தேய்மானத் தொகையை கணக்கிட, ஆண்டுத் தொகை காரணி பயன்படுத்தப்படுகிறது.
- ஆண்டுத் தொகை காரணியை, ஆண்டுத் தொகை அட்டவணை அல்லது சூத்திரத்தை பயன்படுத்தி கணக்கிடலாம்.

<u>தேய்மானத் தொகை பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.</u>

| |
|---|
| தேய்மானத் தொகை = ஆண்டுத் தொகை காரணி × சொத்தின் ஆரம்ப அடக்கவிலை |

## 29. தேய்மானம் வரைவிலக்கணம் தருக.

- ஸ்பைசர் மற்றும் பெக்லரின் கூற்றுப்படி, "தேய்மானம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில், எக்காரணத்தாலும் ஏற்படும் ஒரு சொத்தின் பயனளிப்பு கால இழப்பைக் குறிக்கும் ஒரு அளவாகும்".

( அல்லது )



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

- ❖ கார்ட்டரின் கூற்றுப்படி, "தேய்மானம் என்பது எக்காரணத்தினாலும், ஒரு சொத்தின் மதிப்பில் உண்டாகும் படிப்படியான மற்றும் நிலையான குறைவே ஆகும்."

## 30. தேய்மானம் நீக்க வேண்டியதன் அவசியம் யாவை?

1. சரியான இலாபம் அல்லது நட்டம் கண்டறிய
2. உண்மையான, மற்றும் நியாயமான நிதி நிலையை உணர்த்த
3. நிலைச் சொத்தினை மாற்றுவதற்காக
4. வரிச் சலுகைகளைப் பெற
5. சட்டத் தேவையைப் பூர்த்தி செய்ய

## 31. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

1. தேய்வு மற்றும் உராய்வு
   - ❖ சாதாரணமாக புலனாகும் நிலைச் சொத்தை பயன்படுத்தும் போது, அதன் மதிப்பு குறைந்து கொண்டே செல்கிறது. அது தேய்வு மற்றும் உராய்வு என்று அழைக்கப்படுகிறது.
2. காலப்போக்கு
   - ❖ காலப்போக்கு காரணமாக, ஒரு சில சொத்துகளை பயன்படுத்தினாலும் அல்லது பயன்படுத்தாமல் இருந்தாலும், அவற்றின் பயன்பாட்டு நிலை குறையும்.
3. வழக்கொழிவு
   - ❖ நவீன பதிலி சொத்துகளின் வருகையால், சொத்துகளின் மதிப்பு குறைவது வழக்கொழிவு எனப்படும்.
   - ❖ புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதுமையான செயல்முறைகள் காரணமாக, இது ஏற்படுகிறது.
4. நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருப்பது
   - ❖ தேவைக்கான நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருக்கும்போது, அச்சொத்தின் பயன்பாடு நிறுத்தப்படுகிறது.
5. பராமரிப்பின்மை
   - ❖ சொத்துகள் சரிவர பராமரிக்கப்படும் போது, அச்சொத்தின் வாழ்நாள் அதிகரிக்கிறது.
   - ❖ சொத்துகள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்றால், அதிக அளவு தேய்மானத்திற்கான வாய்ப்புகள் உண்டு.
6. அசாதாரணமான காரணிகள்
   - ❖ தீ விபத்து, இயற்கைச் சீற்றங்கள் போன்ற அசாதாரண காரணிகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில், நிலைச் சொத்தின் பயன்பாடு குறைந்து, நீக்கப்படும் நிலைக்கும் கொண்டு செல்லலாம்.

## 32. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? ( ஜூன் 2019 )

- ❖ நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட வருவாயினத் தன்மையுள்ள ஒரு செலவின் பயன், எதிர்வரும் ஆண்டு அல்லது ஆண்டுகளுக்கும் கிடைக்குமானால், அச்செலவு நீள்பயன் வருவாயினச் செலவு ஆகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

33. முதலினச் செலவு மற்றும் வருவாயினச் செலவு வேறுபடுத்தவும்.

| அடிபபடை | முதலினச் செலவு | வருவாயினச் செலவு |
|---|---|---|
| தன்மை | அடிக்கடி நிகழாதத் தன்மையுடையது | அடிக்கடி நிகழும் தன்மை உடையது |
| நோக்கம் | வருவாய் ஈட்டும் திறனை அதிகரிப்பது | வியாபாரத்தின் அன்றாட செயல்பாடுகளை மேற்கொள்வது |
| பயனளிப்பு காலம் | இச்செலவின் பலன், நீண்ட காலத்திற்கு கிடைக்கும் | நடப்பு ஆண்டிற்கு மட்டுமே பலன் தரக்கூடியது |
| இலாபம் ஈட்டும் திறனில் ஏற்படுத்தும் விளைவு | இலாபம் ஈட்டும் திறனை அதிகரிக்கச் செய்யும். | இலாபம் ஈட்டும் திறனை, பராமரித்து வைத்துக் கொள்ள உதவும் |
| கணக்கியல் நடைமுறை | இருப்பு நிலைக் குறிப்பில் சொத்து பக்கத்தில் தோன்றும் | நேரடிச் செலவுகள் வியாபாரக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும், மறைமுகச் செலவுகள் இலாப நட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும் தோன்றும் |

34. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும்.

| வ.எண் | அடிப்படை | முதலின வரவு | வருவாயின வரவு |
|---|---|---|---|
| 1 | தன்மை | அடிக்கடி நிகழாதத் தனமையுடையது | அடிக்கடி நிகழும் தனமையுடையது |
| 2 | அளவு | பெரும்பாலும் பேரளவிலான தொகையாக இருக்கும் | சிறிய அளவிலான தொகையாக இருக்கும் |
| 3 | பகிர்வு | இத்தொகையை இலாபமாக கருதி பகிர்ந்தளிக்க முடியாது | வருவாயின செலவைக் காட்டிலும், மிகுதியான வருவாயின வரவுகள், இலாபமாகக் கருதிப் பகிர்ந்து அளிக்கப்படும் |

35. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தரவும்.

- நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட வருவாயினத் தன்மையுள்ள ஒரு செலவின் பயன், எதிர்வரும் ஆண்டு அல்லது ஆண்டுகளுக்கும் கிடைக்குமானால், அச்செலவு நீள்பயன் வருவாயினச் செலவு ஆகும்.
- இச்செலவின் பயன், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டஆண்டுகளுக்கு கிடைக்கும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**உதாரணங்கள்**

1. விளம்பரத்திற்காக செய்யப்பட்ட பேரளவுத் தொகை
2. பொறி மற்றும் இயந்திரம் மீதான பேரளவு பழுதுபார்ப்புச் செலவுகள்

**36. முதலின, வருவாயின மற்றும் நீள்பயன் வருவாயினச் செலவுகளின் ஏதேனும் மூன்று வேறுபாடுகளை எழுதுக.** ( ஜூன் 2019 )

| அடிபடை | முதலினச் செலவு | வருவாயினச் செலவு | நீள்பயன் வருவாயினச் செலவுகள் |
|---|---|---|---|
| தன்மை | அடிக்கடி நிகழாதத் தன்மையுடையது | அடிக்கடி நிகழும் தன்மை உடையது | அடிக்கடி நிகழாதத் தன்மையுடையது |
| நோக்கம் | வருவாய் ஈட்டும் திறனை அதிகரிப்பது | வியாபாரத்தின் அன்றாட செயல்பாடுகளை மேற்கொள்வது | குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு பலன் பெற இச்செலவு மேற்கொள்ளப்படுகிறது. |
| பயனளிப்பு காலம் | இச் செலவின் பலன், நீண்ட காலத்திற்கு கிடைக்கும் | நடப்பு ஆண்டிற்கு மட்டுமே பலன் தரக்கூடியது | பலனை, ஒரு கணக்காண்டிற்கு மேல் எதிர்பார்க்க முடியும் |
| இலாபம் ஈட்டும் திறனில் ஏற்படுத்தும் விளைவு | இலாபம் ஈட்டும் திறனை அதிகரிக்கச் செய்யும். | இலாபம் ஈட்டும் திறனை, பராமரித்து வைத்துக் கொள்ள உதவும் | சில ஆண்டுகளுக்கு வணிகத்திற்கு பலன் தரக் கூடியது |
| கணக்கியல் நடைமுறை | இருப்பு நிலைக் குறிப்பில் சொத்து பக்கத்தில் தோன்றும் | நேரடிச் செலவுகள் வியாபாரக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும், மறைமுகச் செலவுகள் இலாப நட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும் தோன்றும் | நடப்பு ஆண்டில் போக்கெழுதப்பட்ட தொகை, இலாப நட்ட கணக்கின் பற்றுப்பக்கத்திலும், எஞ்சியுள்ள தொகை இருப்புநிலைக் குறிப்பில்சொத்துப் பக்கத்திலும் தோன்றும். |

**37. ஏதேனும் இரண்டு நேரடிச் செலவுகள் மற்றும் மறைமுகச் செலவுகளை குறிப்பிடுக.** ( மார்ச் 2019 )

**நேரடிச் செலவுகள்** : 1. கூலி 2. உள்தூக்குக் கூலி 3. துறைமுகக் கட்டணம் 4. உள் நுழைவு வரி 5. இறக்குமதி வரி.

**மறைமுகச் செலவுகள்** : 1. அலுவலக மற்றும் நிர்வாகச் செலவுகள் 2. விற்பனை மற்றும் வழங்கல் செலவுகள்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**38. இருப்பாய்விற்கும் இருப்புநிலைக் குறிப்பிற்கும் இடையே உள்ள ஏதேனும் இரண்டு வேற்றுமைகளை எழுதுக.**

| வ.எண் | அடிப்படை | இருப்பாய்வு | இருப்புநிலைகுறிப்பு |
|---|---|---|---|
| 1 | நோக்கம் | கணக்கியல் பதிவுகளின், கணக்கீட்டு சரிதன்மையை பரிசோதிக்க இது தயாரிக்கப் படுகின்றது | வணிகத்தின் நிதி நிலையை அறிந்துகொள்ள, இது தயாரிக்கப் படுகின்றது |
| 2 | நிலை | இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் முன், தயாரிக்கப்படுகின்றது | இருப்பாய்வு மற்றும் வியாபார இலாப நட்டக் கணக்கு தயாரித்தப் பிறகு தயாரிக்கப் படுகின்றது |
| 3 | கட்டாயம் | இருப்பாய்வு தயாரிக்க வேண்டிய கட்டாயம் இல்லை | சில தருணங்களில், இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது |

**39. சரிக்கட்டுப் பதிவுகள் என்றால் என்ன?** ( மார்ச் 2019 )

- கொடுபடவேண்டிய செலவினங்கள், முன்கூட்டிச் செலுத்திய செலவினங்கள், பெறவேண்டிய வருமானங்கள் மற்றும் முன்கூட்டிப் பெற்றவருமானங்கள் போன்ற இருபாய்வில் அக்கணக்காண்டின் இறுதியில் எடுத்துக் கொள்ளப்படாத நடவடிக்கைகளுக்காக செய்யப்படும் குறிப்பேட்டுப் பதிவே, சரிக்கட்டுப் பதிவு எனப்படும்.

**40. வன்பொருள் என்றால் என்ன?** ( மார்ச் 2019 )

- கணினியின் இயற்கூறுகளை உள்ளடக்கியது அதன் வன்பொருளாகும்.
- முழுமையான கணினி அமைப்பை உருவாக்குவதற்கான உள்ளீட்டு சாதனங்கள் மற்றும் வெளியீட்டு சாதனங்களையும் வன்பொருள் கொண்டிருக்கும்.

**41. மென்பொருள் என்றால் என்ன?** ( மார்ச் 2019 )

- வன்பொருள் மற்றும் கணினி அமைப்பின் பயனாளிக்கும் இடையே இடைமுகமாக அமையும் நிரல்களின் தொகுப்பு மென்பொருள் எனக் குறிப்பிடப்படுகிறது.

**42. கணினிமயக் கணக்கியல் முறையின் கூறுகள் யாவை?** ( ஜூன் 2019 )

(i) வன்பொருள் (ii) மென்பொருள் (iii) ஆட்கள் (iv) செயல்படும் முறை (v) தரவு மற்றும் (vi) இணைப்பு நிலை.

**43. ஏதேனும் இரண்டு கணக்கியல் தொகுப்பின் பெயரைக் குறிப்பிடவும்.**

1. ஆயத்த மென்பொருள்
2. திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள்
3. உருவாக்கப்பட்ட மென்பொருள்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

44. ஆயத்த மென்பொருள்களுக்கான உதாரணங்களில் ஏதேனும் இரண்டைத் தரவும்.

1. Tally 2. Busy 3. Marg 4. Profit books

45. பல்வேறு வகையான குறிமுறையாக்க முறைகளைக் குறிப்பிடுக. ( மார்ச் 2019 )

1) **தொடர்ச்சியான குறிமுறை**

- தொடர்ச்சியான குறிமுறையில், எண்கள் மற்றும் எழுத்துக்களை அடுத்தடுத்து வரிசையாக ஒதுக்கப்படுவதாகும்.
- இந்த குறிமுறைகள், காசோலை, இடாப்பு பொன்ற பல மூல ஆவணங்களில் முதன்மையாக குறிப்பிடப்படுகிறது.
- தொடார்ச்சியான குறிமுறை, ஆவணங்கள் தேடுதலை எளிதாக்குகிறது.

**உதாரணமாக** :

| குறிமுறை | கணக்குகள் |
|---|---|
| CL001 | ABC நிறுமம் |
| CL002 | XYZ நிறுமம் |
| CL003 | மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் |

2) **தொகுப்புக் குறிமுறை**

- தொகுப்புக் குறிமுறையில், ஒரு குறிப்பிட்ட பரப்பு எண்களை விரும்பிய அளவிலான துணைப் பரப்புகளாகப் பிரித்தெடுக்கப்படும் மற்றும் ஒவ்வொரு துணைப்பரப்பும், ஒரு குறிப்பிட்டக் குழுவுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.
- அதிகப்படியான தொகுப்பு குறிமுறை சூழ்நிலைகளில், துணைபரப்புகளில் உள்ள எண்கள் தொடர்ச்சியான குறிமுறையை தழுவியே இருக்கும்.
- அதாவது, எண்கள் அடுத்தடுத்து கூடி இருக்கும்.

**உதாரணமாக** :

| குறிமுறை | விற்பனையாளர் வகை |
|---|---|
| 100 - 199 | சிறிய விசைக் குழாய்கள் |
| 200 - 299 | நடுத்தர விசைக் குழாய்கள் |
| 300 - 399 | குழாய்கள் |
| 400 - 499 | பொறிகள் |

3) **மதியோட்டுக் குறிமுறை**

- மதியோட்டுக் குறிமுறை எழுத்துக்கள் அல்லது சுருக்கங்கள், ஒரு துண்டுத் தகவலை மனத்திற்கொள்ளச் செய்ய அடையாளமாக கொண்டிருக்கும்.

**உதாரணமாக** :

| குறிமுறை | தகவல் |
|---|---|
| பேபஎ | பேரேட்டு பக்க எண் |
| இ எ | இரசீது எண் |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**46. கணினி அமைப்பின் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சாதனங்களைக் குறிப்பிடுக.**

1) <u>உள்ளீட்டு சாதனங்கள்</u>
   1. விசைப்பலகை ( KEY BOARD )
   2. ஒளியியல் வருடி ( SCANNNER )
   3. சுட்டி ( MOUSE )
   4. இயக்குப்பிடி ( JOYSTICK )
   5. தொடுதிரை ( TOUCH SCREEN )
   6. எழுத்தாணி ( STYLUS )

2) <u>வெளியீட்டு சாதனங்கள்</u>
   1. திரையகம் ( MONITUR )
   2. அச்சுப்பொறி ( PRINTER )

---

**47. கணினிமயக் கணக்கியல் முறையின் நன்மைகள்**

1) <u>விரைவான செயல்முறையாக்கம்</u>
   - ❖ ஒரு குறிப்பிட்டச் செயலை செய்து முடிக்க மனிதர்களை விட கணினிக்கு மிகக் குறைவான நேரமே தேவைப்படுகின்றது.
   - ❖ ஆகவே, கணக்கியல் தரவுகள், கணினிமயக் கணக்கியல் முறையை பயன்படுத்தி விரைந்து செயல்முறைப்படுத்தப் படுகின்றது.

2) <u>துல்லியமான தகவல்</u>
   - ❖ கையால் எழுதும் கணக்கியல் முறையில் ஒரு கணக்கியல் தரவு திரும்பத் திரும்ப எடுத்தெழுதுவது போல் இல்லாமல் கணினிமயக் கணக்கியல் முறையில் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் ஒரே ஒருமுறை மட்டுமே பதிவு தேவைப்படுவதால் பிழைகள் ஏற்படுவதற்கு குறைவான வாய்ப்பு உள்ளது.

3) <u>நம்பகத்தன்மை</u>
   - ❖ சுவாரசியமின்மை, சோர்வு அல்லது களைப்பு போன்றவை கணினி அமைப்பை பாதிப்பதில்லை. எனவே, மீண்டும் மீண்டும் செய்யும் செயல்களைத் திறம்பட செய்ய முடியும். மேலும், அது அதிகப்படியான நம்பகத்தன்மை கொண்டது.

4) <u>எளிதில் கிடைக்கக்கூடிய தகவல்கள்</u>
   - ❖ தகவல்கள் எளிதில் கிடைக்கப் பெறுகின்றன. மேலும், அவற்றை பல்வேறு பயனாளிகளுக்கு ஒரே நேரத்தில் தெரியப்படுத்தலாம்.

5) <u>செயல்திறன்</u>
   - ❖ கணினி அடிப்படையிலான கணக்கியல் முறை, நேரத்தையும், வளங்களையும் சிறப்பாக பயன்படுத்துவதை உறுதிச்செய்கிறது.

6) <u>தேக்ககம் மற்றும் திரும்ப எடுத்தல்</u>
   - ❖ கையால் எழுதும் முறையிலுள்ள குறிப்பேடு, பேரேடு மற்றும் கணக்கியல் பதிவேடுகள் போன்ற கணக்கேடுகளை ஒப்பிடுகையில், கணினிமயக் கணக்கியல் அமைப்பில் மிகக் குறுகிய இடவசதியே தேவை.

7) <u>தன்னிச்சையாக அறிக்கை தயாரிப்பு</u>
   - ❖ கணக்கியல் அறிக்கைகளான இருப்பாய்வு மற்றும் நிதிநிலை அறிக்கைகள் தன்னிச்சையாகவே உருவாக்கப்பட்டுவிடும். அவைகள் சுட்டியால் சுண்டியவுடன் எளிதில் அணுகும்படியாக இருக்கும்.

# கணக்கியல் வினா விடைகள்

1. **கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக**

(அ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
45,000 = 19,000 + ?

(ஆ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
1,15,000 = ? + 70,000

(இ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
? = 1,12,000 + 48,000

**தீர்வு** :

(அ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
45,000 = 19,000 + 26,000

(ஆ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
1,15,000 = 45,000 + 73,000

(இ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
1,60,000 = 1,12,000 + 48,000

2. **கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக** ( மார்ச் 2019 )

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| அ) | 1,00,000 | = | 80,000 | + | ? |
| ஆ) | 2,00,000 | = | ? | + | 40,000 |
| இ) | ? | = | 1,60,000 | + | 80,000 |

**தீர்வு** :

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| அ) | 1,00,000 | = | 80,000 | + | 20,000 |
| ஆ) | 2,00,000 | = | 1,60,000 | + | 40,000 |
| இ) | 2,40,000 | = | 1,60,000 | + | 80,000 |

3. **கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக** ( ஜூன் 2019 )

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| அ) | 1,50,000 | = | 80,000 | + | ? |
| ஆ) | ? | = | 2,00,000 | + | 50,000 |
| இ) | 2,00,000 | = | ? | + | 23,000 |
| ஈ) | 20,50,000 | = | 15,00,000 | + | ? |

**தீர்வு** :

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| அ) | 1,50,000 | = | 80,000 | + | 70,000 |
| ஆ) | 2,50,000 | = | 2,00,000 | + | 50,000 |
| இ) | 2,00,000 | = | 1,77,000 | + | 23,000 |
| ஈ) | 20,50,000 | = | 15,00,000 | + | 5,50,000 |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

4. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுக்கான விளக்கக் குறிப்பு தருக.

குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 ஏப்.1 | ரொக்க க/கு ப<br>ஷியாம் முதல் க/கு<br>( ------------------------------------------------ ) | | 2,00,000 | 2,00,000 |
| 5 | வங்கி க/கு ப<br>ரொக்க க/கு<br>(------------------------------------------- ) | | 40,000 | 40,000 |

**தீர்வு**

1) ஷியாம் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது
2) வங்கியில் ரொக்கம் செலுத்தியது

5. விடுபட்ட தகவல்களை பூர்த்தி செய்க. ( ஜூன் 2019 )

குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 1 | ரொக்க க/கு ப<br>-------------------<br>(வங்கியிலிருந்து ரொக்கம் எடுத்தது ) | | 1,00,000 | 1,00,000 |
| 2 | அஜய் க/கு ப<br>------------------<br>(அஜய்க்கு கடன் விற்பனை செஉதது ) | | 90,000 | 90,000 |
| 3 | -------------------<br>ரொக்க க/கு<br>( சம்பளம் கொடுத்தது ) | | 5,000 | 5,000 |

**தீர்வு** :

குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 1 | ரொக்க க/கு ப<br>வங்கி க/கு<br>(வங்கியிலிருந்து ரொக்கம் எடுத்தது ) | | 1,00,000 | 1,00,000 |
| 2 | அஜய் க/கு ப<br>விற்பனை க/கு<br>(அஜய்க்கு கடன் விற்பனை செய்தது ) | | 90,000 | 90,000 |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | சம்பளம் க/கு ப<br>ரொக்க க/கு<br>( சம்பளம் கொடுத்தது ) | | 5,000 | 5,000 |

6. விடுபட்ட தகவல்களை நிரப்புக.

அ) ------------------- க/ கு ப
-------------- க/கு
( அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது ₹. 4,000 )

ஆ) ------------------- க/கு ப
-------------- க/கு
( மின்கட்டணம் செலுத்தியது ₹. 500 )

இ) ------------------- க/ கு ப
-------------- க/கு
( ரொக்கத்திற்கு வாங்கியது ₹. 15,000 )

**தீர்வு**

அ) அறைகலன் க/ கு ப 4,000
ரொக்க க/கு 4,000
( அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது ₹. 4,000 )

ஆ) மின்கட்டணம் க/கு ப 500
ரொக்க க/கு 500
( மின்கட்டணம் செலுத்தியது ₹. 500 )

இ) கொள்முதல் க/ கு ப 15,000
ரொக்க க/கு 15,000
( ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹. 15,000 )

7. கீழ்கண்ட விவரங்களில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பிலிருந்து குறிபேட்டுப்பதிவில் விடுபட்ட தொகையினையும், அதன் கணக்குகளையும் கண்டுபிடித்து, முழுமையான குறிப்பேட்டில் எழுதவும்.

ரேகா ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2003 அக்.1 | ----------- ப<br>------------<br>( ரேகா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 1,00,000 | ---------- |
| 5 | -------------- ப<br>---------------------<br>(சம்பளம் ரொக்கமாக வழங்கியது) | | 20,000 | ---------- |
| 11 | -------------- ப<br>-----------<br>(சொந்த பயனுக்காக ரொக்கம் எடுத்தது) | | ---------- | 12.500 |
| 21 | ------------------- ப<br>-------------------<br>( ரொக்கமாக பெற்ற கழிவு) | | 12,000 | 12,000 |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

| | | | | |
|---|---|---|---|---|
| 30 | ------------------ ப<br>------------------<br>(தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம் பணம் எடுத்தது) | | 7,000 | 7,000 |

## தீர்வு

**ரேகா ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2003 அக்.1 | ரொக்க க/கு ப<br>ரேகா முதல் க/கு<br>( ரேகா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 1,00,000 | 1,00,000 |
| 5 | சம்பளம் க/கு ப<br>ரொக்க க/கு<br>(சம்பளம் ரொக்கமாக வழங்கியது) | | 20,000 | 20,000 |
| 11 | எடுப்புகள் க/கு ப<br>ரொக்க க/கு<br>(சொந்த பயனுக்காக ரொக்கம் எடுத்தது) | | 12,500 | 12.500 |
| 21 | ரொக்க க/கு ப<br>பெற்ற கழிவு க/கு<br>( ரொக்கமாக பெற்ற கழிவு) | | 12,000 | 12,000 |
| 30 | ரொக்க க/கு ப<br>வங்கி க/கு<br>(தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம் பணம் எடுத்தது) | | 7,000 | 7,000 |

8. பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கைத் தயாரிக்கவும். ( ஜூன் 2019 மாதிரி )

| | | |
|---|---|---|
| 2018 | | ₹. |
| ஜன 1 | கையில் உள்ள அறைகலன் | 2,000 |
| 1 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 4,000 |
| 30 | அறைகலன் விற்றது | 400 |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**தீர்வு**

ப **அறைகலன் கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹ | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| 2018 ஜன 1 | இருப்பு கீ / கொ | | 2,000 | 2018 ஜன 30 | ரொக்க க/கு | | 400 |
| 1 | ரொக்க க/கு | | 4,000 | 31 | இருப்பு கீ /இ | | 5,600 |
| | மொத்தம் | | 6,000 | | மொத்தம் | | 6,000 |
| பிப் 1 | இருப்பு கீ/கொ | | 5,600 | | | | |

9. பின் வரும் நடவடிக்கைகளிலிருந்து விற்பனை கணக்கு தயாரிக்கவும். ( மார்ச் 2019 )

| 2018 | | ₹. |
|---|---|---|
| ஜன 1 | சாம் என்பவருக்கு கடனுக்கு விற்றது | 4,000 |
| 4 | சுரேஷ் என்பவருக்கு ரொக்கத்திற்கு விற்றது | 2,500 |
| 11 | ஜாய் என்பவருக்கு கடனுக்கு விற்றது | 8,000 |
| 17 | ராஜன் என்பவருக்கு ரொக்கத்திற்கு விற்றது | 3,000 |

**தீர்வு**

ப **விற்பனை கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப. எண் | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப. எண் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2018 ஜன 31 | இருப்பு கீ/இ | | 17,500 | 2018 ஜன1 | சாம் க/கு | | 4,000 |
| | | | | 4 | சுரேஷ் க/கு | | 2,500 |
| | | | | 11 | ஜாய் க/கு | | 8,000 |
| | | | | 17 | ராஜன் க/கு | | 3,000 |
| | | | 17,500 | | | | 17,500 |
| | | | | பிப் 1 | இருப்புகீ/கொ | | 17,500 |

10. 2018 ஜனவரி 1 இல் தொடங்கும் ஆண்டிற்கான தொடக்க இருப்பினை உரிய குறிப்பேட்டில் பதிவு செய்க.

ரொக்கம் ₹. 50,000 ; சரக்கிருப்பு ₹. 25,000 ; பற்பல கடனாளிகள் ₹. 15,000 ;
பற்பல கடனீந்தோர் ₹. 10,000



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**தீர்வு**

**தொடக்கப் பதிவு**

| விவரம் | | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| ரொக்கம் க/கு | ப | | 50,000 | |
| சரக்கிருப்பு க/கு | ப | | 25,000 | |
| கடனாளிகள் க/கு | ப | | 15,000 | |
| கடனீந்தோர் க/கு | | | | 10,000 |
| முதல் க/கு (சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கொணரப்பட்டது) | | | | **80,000** |

11. 2017 ஜனவரி 1 இல் தொடங்கும் ஆண்டிற்கான தொடக்க இருப்பினை உரிய குறிப்பேட்டில் பதிவு செய்க.
ரொக்கம் ₹. 1,00,000 ; சரக்கிருப்பு ₹. 50,000 ; பற்பல கடனாளிகள் ₹. 30,000 ; பற்பல கடனீந்தோர் ₹. 20,000

**தீர்வு**

**தொடக்கப் பதிவு**

| விவரம் | | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| ரொக்கம் க/கு | ப | | 1,00,000 | |
| சரக்கிருப்பு க/கு | ப | | 50,000 | |
| கடனாளிகள் க/கு | ப | | 30,000 | |
| கடனீந்தோர் க/கு | | | | 20,000 |
| முதல் க/கு (சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கொணரப்பட்டது) | | | | **1,60,000** |

12. பின்வரும் தொடக்கப்பதிவினைக் கொண்டு திருமதி. ரோஸ் என்பவரின் ஏடுகளில் முக்கிய பேரேட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும். ( மார்ச் 2019 )

**குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|---|
| 2017 ஜன 1 | ரொக்கம் க/கு | ப | | 45,000 | |
| | சரக்கிருப்பு க/கு | ப | | 55,000 | |
| | ரோஸ் முதல் க/கு (சென்ற ஆண்டின் இருப்புகள் கணக்கில் கொண்டு வரப்பட்டது) | | | | 1,00,000 |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**தீர்வு**

## ரொக்க கணக்கு

| நாள் | விவரம் | கு.ப. எண் | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப. எண் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | | 45,000 | | | | |

## சரக்கிருப்பு கணக்கு

| நாள் | விவரம் | கு.ப. எண் | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப. எண் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜன | இருப்பு கீ/கொ | | 55,000 | | | | |

## ரோஸ் முதல் கணக்கு

| நாள் | விவரம் | கு.ப. எண் | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப. எண் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | | 1,00,000 |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## இருப்பாய்வின் மாதிரி.

" ------------------ " ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | முதல் | | | xxxx |
| 2 | விற்பனை | | | xxxx |
| 3 | பற்பலகடனீந்தோர் | | | xxxx |
| 4 | கொள்முதல் திருப்பம் / வெளித்திருப்பம் | | | xxxx |
| 5 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | | xxxx |
| 6 | பெற்ற வட்டி | | | xxxx |
| 7 | பெற்ற கழிவு / ஈட்டிய கழிவு | | | xxxx |
| 8 | பெற்ற தள்ளுபடி | | | xxxx |
| 9 | பெற்ற கடன் (or) கடன் ( வரவு ) | | | xxxx |
| 10 | காப்பு நிதி | | | xxxx |
| 11 | வங்கி மேல்வரைப் பற்று | | | xxxx |
| 12 | வங்கிக் கடன் | | | xxxx |
| 13 | வாராஜயக்கடன் ஒதுக்கு | | | xxxx |
| 14 | ஊதியம் | | xxxx | |
| 15 | பொறி, இயந்திரம் | | xxxx | |
| 16 | அறைகலன் | | xxxx | |
| 17 | பற்பல கடனாளிகள் | | xxxx | |
| 18 | தொடக்கச் சரக்கிருப்பு | | xxxx | |
| 19 | கொள்முதல் | | xxxx | |
| 20 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | xxxx | |
| 21 | அளித்த ( செலுத்திய) வட்டி | | xxxx | |
| 22 | செலுத்திய கழிவு, அளித்ததள்ளுபடி | | xxxx | |
| 23 | விற்பனை திருப்பம் / உள்திருப்பம் | | xxxx | |
| 24 | வாடகை, வரிகள் | | xxxx | |
| 25 | கை ரொக்கம், வங்கிரொக்கம் | | xxxx | |
| 26 | வாராக் கடன் | | xxxx | |
| 27 | காப்பீடு | | xxxx | |
| 28 | பயணச் செலவுகள் | | xxxx | |
| 29 | சில்லறைச் செலவுகள் | | xxxx | |
| 30 | உள் ஏற்றிச்செல் செலவு, வெளி ஏற்றிச்செல் செலவுகள் | | xxxx | |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

குறிப்பு : 1. பற்று இருப்பு என்பது ஒரு சொத்து அல்லது செலவு அல்லது நட்டம் ஆகும்
2. வரவு இருப்பு என்பது ஒரு பொறுப்பு அல்லது வரவு அல்லது ஆதாயம் ஆகும்.
( இருப்பாய்வில் தோன்றும் வேற்றுமைத் தொகை, அநாமத்துக் கணக்குக்கு மாற்றப்படுகிறது )

13. கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப்பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டிடுக:

| பற்று இருப்புகள் | வரவு இருப்புகள் |
|---|---|
| வெளித்தூக்குக் கூலி | விற்பனை |
| உள்தூக்கு கூலி | வட்டிப் பெற்றது |
| கொள்முதல் | தள்ளுபடி பெற்றது |
| வாராக்கடன் | முதல் |
| வட்டி செலுத்தியது | கொள்முதல் திருப்பம் |
| எடுப்புகள் | |
| விற்பனைத் திருப்பம் | |

14. கீழ்க்காணும் கணக்குகளில் தோன்றும் இருப்புகளைக் குறிப்பிடுக.

அ. ரொக்கம்
ஆ. கடனீந்தோர்
இ. விற்பனை
ஈ. அறைகலன்
உ. கழிவு பெற்றது
ஊ. கடனாளி
எ. கொள்முதல்
ஏ. முதல்
ஐ. ஊதியம் வழங்கியது
ஒ. கணினி
ஔ. வங்கி மேல்வரைப்பற்று

விடை

| பற்று இருப்புகள் | வரவு இருப்புகள் |
|---|---|
| அ. ரொக்கம்<br>ஈ. அறைகலன்<br>ஊ. கடனாளி<br>எ. கொள்முதல்<br>ஐ.ஊதியம்வழங்கியது<br>ஒ. கணினி | ஆ. கடனீந்தோர்<br>இ. விற்பனை<br>உ. கழிவு பெற்றது<br>ஏ. முதல்<br>ஔ. வங்கி மேல்வரைப்பற்று |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

15. பாலன் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி கீழ்கணட பேரேட்டு இருப்புகளைத் தருகிறது. அவற்றிலிருந்து 2016 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பாய்வு தயாரிக்கவும். ( ஜூன் 2019 )

| கணக்கின் பெயர் | தொகை ₹ | கணக்கின் பெயர் | தொகை ₹ |
|---|---|---|---|
| கணிப்பொறிகள் | 26,000 | நிலம் | 30,000 |
| ஓட்டுநர்கள் ஊதியம் | 4,000 | வங்கி கடன் | 15,000 |
| வரிகளும், காப்பீடும் | 16,500 | கட்டணம் பெற்றது | 18,150 |
| எரிபொருள் மற்றும் சக்தி | 2,000 | முதல் | 53,850 |
| வரிகளும் மற்றும் வீதங்களும் | 1,500 | விளம்பரம் | 7,000 |

## தீர்வு

### பாலன் ஓட்டுநர் பயிற்சி ஏடுகளில் 31.03.2017 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | கணிப்பொறிகள் | | 26,000 | |
| 2 | ஓட்டுநர்கள் ஊதியம் | | 4,000 | |
| 3 | வரிகளும், காப்பீடும் | | 16,500 | |
| 4 | எரிபொருள் மற்றும் சக்தி | | 2,000 | |
| 5 | வரிகளும் மற்றும் வீதங்களும் | | 1,500 | |
| 6 | நிலம் | | 30,000 | |
| 7 | வங்கி கடன் | | | 15,000 |
| 8 | கட்டணம் பெற்றது | | | 18,150 |
| 9 | முதல் | | | 53,850 |
| 10 | விளம்பரம் | | 7,000 | |
| | மொத்தம் | | 87,000 | 87,000 |

16. பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

| கணக்கின் பெயர் | தொகை ₹ | கணக்கின் பெயர் | தொகை ₹ |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,00,000 | விற்பனை | 1,50,000 |
| வங்கி கடன் | 75,000 | கடனீந்தோர் | 50,000 |
| கடனாளி | 1,50,000 | ரொக்கம் | 90,000 |
| சரக்கிருப்பு | 35,000 | முதல் | 1,00,000 |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**தீர்வு**

## இருப்பாய்வு

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | கொள்முதல் | | 1,00,000 | |
| 2 | வங்கி கடன் | | | 75,000 |
| 3 | கடனாளி | | 1,50,000 | |
| 4 | சரக்கிருப்பு | | 35,000 | |
| 5 | விற்பனை | | | 1,50,000 |
| 6 | கடனீந்தோர் | | | 50,000 |
| 7 | ரொக்கம் | | 90,000 | |
| 8 | முதல் | | | 1,00,000 |
| | மொத்தம் | | 3,75,000 | 3,75,000 |

17. பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

| கணக்கின் பெயர் | தொகை ₹ | கணக்கின் பெயர் | தொகை ₹ |
|---|---|---|---|
| வங்கி கடன் | 2,00,000 | கொள்முதல் | 1,80,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,00,000 | விற்பனை | 3,00,000 |
| சரக்கிருப்பு | 70,000 | கடனாளிகள் | 4,00,000 |
| முதல் | 2,50,000 | வங்கி | 2,00,000 |

**தீர்வு**

## இருப்பாய்வு

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | வங்கி கடன் | | | 2,00,000 |
| 2 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | | 1,00,000 |
| 3 | சரக்கிருப்பு | | 70,000 | |
| 4 | முதல் | | | 2,50,000 |
| 5 | கொள்முதல் | | 1,80,000 | |
| 6 | விற்பனை | | | 3,00,000 |
| 7 | கடனாளிகள் | | 4,00,000 | |
| 8 | வங்கி | | 2,00,000 | |
| | மொத்தம் | | 8,50,000 | 8,50,000 |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

18. ரோகிணி என்பவரது ஏடுகளில் இருந்து 31.03.2018 அன்று எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும். ( மார்ச் 2019 )

| கணக்கின் பெயர் | தொகை ₹ | கணக்கின் பெயர் | தொகை ₹ |
|---|---|---|---|
| முதல் | 60,000 | விற்பனை | 82,000 |
| பெற்ற தள்ளுபடி | 3,250 | எடுப்புகள் | 5,250 |
| கொள்முதல் | 60,000 | விற்பனை திருப்பம் | 4,200 |
| பொறி, இயந்திரம் | 70,000 | மின் கட்டணம் | 800 |
| விளம்பரச் செலவுகள் | 5,000 | | |

**தீர்வு**

**ரோகினி என்பவரது ஏடுகளில் 31.03.2018 ஆம் நாளைய இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | முதல் | | | 60,000 |
| 2 | பெற்ற தள்ளுபடி | | | 3,250 |
| 3 | கொள்முதல் | | 60,000 | |
| 4 | பொறி, இயந்திரம் | | 70,000 | |
| 5 | விளம்பரச் செலவுகள் | | 5,000 | |
| 6 | விற்பனை | | | 82,000 |
| 7 | எடுப்புகள் | | 5,250 | |
| 8 | விற்பனை திருப்பம் | | 4,200 | |
| 9 | மின் கட்டணம் | | 800 | |
| | **மொத்தம்** | | **1,45,250** | **1,45,250** |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## கொள்முதல் ஏடு / விற்பனை ஏடு

19. பின்வரும் நடவடிக்கைகளை 2018 நவம்பர் மாதத்திற்கான அரசன் மோட்டார் உதிரிபாகங்கள் விற்பனையாளர் அவர்களின் கொள்முதல் மற்றும் விற்பனை ஏடுகளில் பதிவு செய்க.

| 2018 | | ₹. |
|---|---|---|
| நவம்பர் 1 | சன்முகத்திடமிருந்து சரக்கு கடனுக்கு வாங்கியது | 20,000 |
| 4 | ராஜாவிற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 15,000 |
| 15 | ராமுவிடமிருந்து கடனுக்கு வாங்கியது | 25,000 |
| 20 | ஆர்த்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 20,000 |
| 25 | மணிக்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 5,000 |

**தீர்வு**

### அரசன் மோட்டார் உதிரிபாக நிறுவனத்தின் ஏடுகளில்
### கொள்முதல் ஏடு

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே.ப.எ | தொகை | |
|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் ₹. | மொத்தம் ₹. |
| 2018 நவ 1<br>15 | சன்முகம்<br>ராமு | | | | 20,000<br>25,000 |
| | கொள்முதல் க/கு ப | | | | 45,000 |

குறிப்பு : 1. கடனுக்கு வாங்கப்படும் சரக்குகள் அனைத்தும் கொள்முதல் ஏட்டில் பதியப்படும்.
2. ரொக்கத்திற்கு சரக்கு வாங்குதல், சொத்துகளை கடனுக்கு மற்றும் ரொக்கத்திற்கு வாங்குதல் இதில் பதியப்படுவது இல்லை

### விற்பனை ஏடு

| நாள் | விவரம் | வெளிச்செல் இடாப்பு எண் | பே.ப.எ | தொகை | |
|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் ₹. | மொத்தம் ₹. |
| 2017 நவ 4<br>20 | ராஜா<br>ஆர்த்தி | | | | 15,000<br>20,000 |
| | விற்பனை க/கு வ | | | | 35,000 |

குறிப்பு : 1. கடனுக்கு விற்கப்படும் சரக்குகள் அனைத்தும் விற்பனை ஏட்டில் பதியப்படும்.
2. ரொக்கத்திற்கு சரக்கு விற்றல் இதில் பதியப்படுவது இல்லை. இதைப்போன்றே சொத்துகளை கடனுக்கு விற்றல் மற்றும் ரொக்கத்திற்கு விற்றல் இதில் பதியப்படுவது இல்லை



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

20. பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரியான குகன் என்பவரின் விற்பனை ஏட்டில் பதிவு செய்க.

2017 மே 2 கரண் என்பவருக்கு கடனுக்கு விற்றது
ஒன்று ₹. 280 வீதம் 100 துண்டுகள்
மீட்டர் ₹. 270 வீதம் 200 மீட்டர் சட்டைத்துணி
மே 5 வீரன் என்பவருக்கு கடனுக்கு விற்றது
ஒன்று ₹. 1,500 வீதம் 10 ஆயத்த ஆடைகள்
மே 16 ஜெயின் நிறுவனத்திடம் கடன் விற்பனைச் செய்தது
ஒன்று ₹. 240 வீதம் 50 போர்வைகள்
மே 25 சரண் என்பவருக்கு பழைய அறைகலன்களை கடனுக்கு விற்றது ₹. 18,000

**தீர்வு**

**விற்பனை ஏடு**

| நாள் | விவரம் | வெளிச் செல் இடாப்பு எண் | பே.ப. எ | தொகை விளக்கம் ₹. | தொகை மொத்தம் ₹. |
|---|---|---|---|---|---|
| 2017 மே 2 | கரண்<br>100 துண்டுகள் ஒன்று ₹. 280 வீதம்<br>200 மீட்டர் சட்டைத் துணி மீட்டர் ₹. 270 வீதம் | | | 28,000<br>54,000 | 82,000 |
| மே 5 | வீரன்<br>10 ஆயத்த ஆடைகள் ஒன்று ₹. 1,500 வீதம் | | | | 15,000 |
| மே 16 | ஜெயின் நிறுவனம்<br>50 போர்வைகள் ஒன்று ₹. 240 வீதம் | | | | 12,000 |
| | விற்பனை க/கு வ | | | | 1,09,000 |

குறிப்பு : சொத்துகளை கடனுக்கு விற்றல் மற்றும் ரொக்கத்திற்கு விற்றல் இதில் பதியப்படுவது இல்லை

21. பின்வரும் நடவடிக்கைகளை கிருஷ்ணாவின் கொள்முதல் மற்றும் விற்பனை ஏடுகளில் பதிவு செய்க.

| 2018 | | ₹. |
|---|---|---|
| டிசம்பர் 1 | சத்யாவிடமிருந்து சரக்கு வாங்கியது | 15,000 |
| 4 | மணியிடமிருந்து ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 10000 |
| 6 | சரண்யாவிற்கு கடனாக சரக்கு விற்றது | 9,000 |
| 17 | பாலாவிடம் சரக்கு வாங்கியது | 20,000 |
| 21 | நித்யாவிற்கு விற்றது | 5,000 |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**தீர்வு**

**கிருஷ்ணா அவர்களின் கொள்முதல் ஏடு**

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே.ப.எ | தொகை | |
|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் ₹. | மொத்தம் ₹. |
| 2018 டிச 1 | சத்யா | | | | 15,000 |
| 17 | பாலா | | | | 20,000 |
| | கொள்முதல் க/கு ப | | | | 35,000 |

**கிருஷ்ணா அவர்களின் விற்பனை ஏடு**

| நாள் | விவரம் | வெளிச்செல் இடாப்பு எண் | பே.ப.எ | தொகை | |
|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் ₹. | மொத்தம் ₹. |
| 2017 டிச 6 | சரண்யா | | | | 9,000 |
| 21 | நித்யா | | | | 5,000 |
| | விற்பனை க/கு வ | | | | 14,000 |

22. பின்வரும் நடவடிக்கைகளை 2017 டிசம்பர் மாதத்திற்கான சுரேஷ் அவர்களின் கொள்முதல் மற்றும் விற்பனை ஏடுகளில் பதிவு செய்க. ( மார்ச் 2019 )

| 2017 | | | ₹. |
|---|---|---|---|
| டிசம்பர் | 1 | சுமதியிடமிருந்து சரக்கு கடனுக்கு வாங்கியது | 17,800 |
| | 4 | இராணிக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 15,200 |
| | 10 | இரகுநாதமிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 10,000 |
| | 21 | சரண்யாவிற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 12,500 |
| | 26 | ஷியாமிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 3,000 |

**தீர்வு**

**சுரேஷ் அவர்களின் கொள்முதல் ஏடு**

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே.ப.எ | தொகை | |
|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் ₹. | மொத்தம் ₹. |
| 2017 டிச 1 | சுமதி | | | | 17,800 |
| 10 | இரகுநாதன் | | | | 10,000 |
| | கொள்முதல் க/கு ப | | | | 27,800 |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## சுரேஷ் அவர்களின் விற்பனை ஏடு

| நாள் | விவரம் | வெளிச்செல் இடாப்பு எண் | பே.ப.எ | தொகை | |
|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் ₹. | மொத்தம் ₹. |
| 2017 டிச 4 | இராணி | | | | 15,200 |
| 21 | சரண்யா | | | | 12,500 |
| | விற்பனை க/கு வ | | | | 27,700 |

23. பின்வரும் நடவடிக்கைகளை கொண்டு 2018 ஏப்ரல் மாதத்திற்கான மோகன் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு தயார் செய்க.

2018 ஏப்ரல்1 வேலூர் அருணிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
ஒரு மீட்டர் ₹. 450 வீதம் 100 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ₹. 180 வீதம் 75 மீட்டர் வெல்வெட் துணி

ஏப்ரல் 10 சென்னை இரத்தினத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது
ஒரு மீட்டர் ₹. 490 வீதம் 60 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ₹. 210 வீதம் 50 மீட்டர் வெல்வெட் துணி

ஏப்ரல் 18 ஆனந்த் நிறுவனம் நம்மிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
ஒரு மீட்டர் ₹. 510 வீதம் 100 மீட்டர் சில்க் துணி

ஏப்ரல் 20 திருச்சி மணி துணியகத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
கட்டு ஒன்று ₹. 730 வீதம் 50 கட்டுகள் காடாத் துணி
கட்டு ஒன்று ₹. 650 வீதம் 80 கட்டுகள் காலிக்கோ துணி

ஏப்ரல் 24 ஈரோடு பாபுவிடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது
சட்டைத் துணிகள் மதிப்பு ₹. 7,000
சேலைகள் மதிப்பு ₹. 25,000

## மோகன் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே. ப.எ | தொகை | |
|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் ₹. | மொத்தம் ₹. |
| 2018 ஏப் 1 | **அருண்**<br>100 மீட்டர் சில்க் துணி, மீட்டர் ₹. 450 வீதம் | | | 45,000 | |
| | 75 மீட்டர் வெல்வெட் துணி, மீட்டர் ₹.180 வீதம் | | | 13,500 | 58,500 |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20 | **மணி**<br>50 கட்டுகள் காடாத் துணி ஒன்று ₹.730 வீதம்<br>80 கட்டுகள் காலிக்கோ துணி ஒன்று ₹.650 வீதம் | | | 36,500<br>52,000 | 88,500 |
| | கொள்முதல் க/கு ப | | | | 1,47,000 |

## மோகன் ஆடையகத்தின் விற்பனை ஏடு

| நாள் | விவரம் | வெளிச்செல் இடாப்பு எண் | பே.ப.எ | தொகை விளக்கம் ₹. | தொகை மொத்தம் ₹. |
|---|---|---|---|---|---|
| 2018 ஏப் 10 | **இரத்தினம்**<br>60 மீட்டர் சில்க் துணி, மீட்டர் ₹. 490 வீதம்<br>50 மீட்டர் வெல்வெட் துணி, மீட்டர் ₹.210 வீதம் | | | 29,400<br>10,500 | 39,900 |
| 18 | **ஆனந்த்**<br>100 மீட்டர் சில்க் துணி, மீட்டர் ₹. 510 வீதம் | | | | 51,000 |
| | விற்பனை க/கு வ | | | | 90,900 |

24. பின்வரும் நடவடிக்கைகளை பொன்னியின் விற்பனை ஏடு மற்றும் விற்பனைத் திருப்ப ஏட்டில் பதிவுசெய்க. ( ஜூன் 2019 மாதிரி )

2017

ஆகஸ்டு 1 இடாப்பு எண் 68 ன் படி, செந்திலுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹. 20,500

ஆகஸ்டு 4 இடாப்பு எண் 74 ன் படி, மாதவனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹. 12,800

ஆகஸ்டு 7 இடாப்பு எண் 78 ன் படி, கனகசபைக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹. 7,500

ஆகஸ்டு 15 வரவுக்குறிப்பு 7 ன் படி, செந்தில் திருப்பிய சரக்கு மதிப்பு₹. 1,500 - க்கு ரொக்கம் அளிக்கப்படவில்லை

ஆகஸ்டு 20 செல்வத்திடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹. 13,300

